(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)
IN THE COURT OF THE IV ADDITIONAL DISTRICT JUDGE , MADURAI.

S.C .No. 323/17

**DEPOSITION OF PW 14 WITNESS FOR PROSECUTION / DEFENCE**

Name : ராஜேந்திரன்
Father's name :
Village :
Taluk :
Caste :
Calling :
Religion :
Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the 15.3.18

மு வி **---**

நான் தற்போது கூடல் நகர் ஜேஜேநகரில் குடியிருக்கிறேன். இதற்கு முன்பு அன்பு நகரில் வாடகைக்கு குடியிருந்தேன். நான் ராணுவத்தில் பணியாற்றி ஓய்வு பெற்று தற்போது மின்சார வாரியத்தில் செக்யூரிட்டியாக பணியாற்றுகிறேன். **1** ம்எதிரியை தெரியும். இவ்வழக்கில் கொலை செய்யப்பட்டு இறந்த மணியை தெரியும். என் வீட்டிலிருந்து **100** அடி துாரத்தில் அவர் குடியிருந்து வந்தார். லாவன்யா வீட்டுக்காரர் இறந்து விட்டதாக சொன்னார்கள். மறுநாள் என்னை போலிசார் அழைத்து விசாரித்தனர். வழக்கு பற்றி தெரியாது.

(அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டு அனுமதியளிக்கப்பட்டது)

என்னை போலிசார் விசாரித்த போது லாவன்யா கூடல் புதுாரில் குடியிருந்ததாகவும், அவர் வீட்டுக்காரர் மணி பெங்களூரில் குடியிருந்ததாகவும் மாதமொருமுறை பெங்களூரிலிருந்து லாவன்யா வீட்டிற்கு வருவார் என சொன்னேன் என்றால் சரியல்ல. மணி இல்லாத நாட்களில் எதிரி ராஜேஷ் என்பவர் லாவன்யா வீட்டிற்கு அடிக்கடி வருவதை நான் பார்த்தேன் என்று சொன்னேன் என்றால் சரியல்ல. தற்போது ஆஜர் எதிரிகளுக்கு பயந்து கொண்டு பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

கு வி -- எதிரிகள் தரப்பில்

இல்லை.